ஓம்

சரஸ்வதியேநம:

# பாரதிவெண்பா

# அந்தாதி.

இஃது

சென்னைச்

சிற்பசாத்திரக்கல்விச்சாலைத்தமிழ்ப்பண்டிதர்

பு-செ இராஜகோபாலமுதலியார்

அவர்களாலியற்றப்பட்டுப்,

புதுப்பாளையம்

சுப்பராயசெட்டியாரவர்களின் குமாரர்

சிங்காரவேலுசெட்டியாரால்

சென்னை,

ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கரஹு புரட்டாசிமீ உ௰வ

இதன்விலை பை - ௩.

ஓம்

சரஸ்வதியேநம:.

பாரதிமீது இயற்றிய

# வெண்பா அந்தாதி.

தனியன்கள்.

அறுபத்து நான்காகி ஆயும் கலைகள்
பெறுபத்துச் சம்பத்தும் பேணில்—வறுமையற
பாரதனில் பாமகளைப் பண்போ டுரைத்தாக்கால்
நேரா திடரொன்றும் நேர். (க)

திருவுடனே பார்வதியும் சேர்ந்து சசியும்
மருவிப் பணிய வருவார்—உருப்பளிங்கு
போன்றதிரு மேனியாள் புத்தகமும் மாலையுந்தான்
சான்றவர்கள் சேர்ந்தார்கள் தாழ்ந்து. (உ)

விருத்தம்.

உலக மூன்றும் உணர்தற் கரியவள்
இலகு ஞானம் இயல அளிப்பவள்
திலதம் என்னத் தெளிதரு நாமகள்
தலைவி அவள்சரண் தாழ்த்தி வணங்குவாம்.

பாரதிவாழிவாழி பதுமனூர்தேவிவாழி
காரணிவாழிவாழி கலைமகள்வாழிவாழி
ஆரணப்பொருளேவாழி அணிபுஜமாலைவாழி
தாரகப்பாவைவாழி தந்தநூல்வாழிவாழி.

———o———

## நூல்.

### காப்பு.

வெண்பாவால்அந்தாதி வேண்டுகல்வி தந்திடவே
பண்பாகப்பாரதிமேல் பாடுதற்கு—கண்பாராய்
காரார்குருகைவளர் காரிமாறன்கஞ்சமலர்த்
தாராரும்செஞ்சரணம் தா.

சீராரும்பாரதியாள் தேனைத்தொகுத்தகவி
பாராருமாக்கள் படிக்கவே—வாரார்ந்த
அம்போருகச்சோதி ஆருங்கழற்கமலப்
பைம்பொற்றாள் வாழ்த்திப் பணி. (க)

பணிந்துதொழுதிட்டால் பாரதியாள் அன்பின்
துணிவுடனேபல்கலையும் தோன்ற—விணிகையுறு
மேனியொடுதோடுடையாள் மேலானநற்றொழிலும்
மானியமும் தந்திடுவாள் மன். (உ)

மன்னவேதந்திடுவாள் வாக்காள்தெளிவுடனே
இன்னமுதமீந்துமிக ஏகமாய்ச்—சொன்னச்

சரஸ்வதியாள்பாரதியாள் தாயாகியீங்கு
வரமளிப்பாள் வாழ்த்துவீர் மாண்பு. (௩)

மாண்பாகஏலாமல் மாநிலத்திலவாடிமிக
யாண்டும்திரியாமல் யாருக—ஈண்டு
வினைசேர்பாரதியை வேண்டினால்சிந்தை
தரைபால் தருவாள் தரி. (௪)

தரித்தந்தபாரதியின் தாளதனைவாழ்த்த
தெரியத்தடுமாறித் தேங்கா—தரியகலை
இந்தவுலகில் இனிதாகத்தந்திடுவாள்
அந்த மடந்தை அறி (௫)

அறியருக்கன்திங்கள அழகெறிக்கும்கோல
நெறிபாரதியாள் நேரப்—பறிக்கும்வினை
தானும்எப்போதும் தரித்திருப்பாள்நாவதனில்
பானுவாய் வாழ்ந்திருப்பாள் பார். (௬)

பாரில்மயிலும் பகர்பிடியும்வண்கொடியும்
தேரும்குயிலும் தெளியாமல்—வாரார்ந்த
பாவைதிருமுகத்தாள் பண்ணுகின்றபாமகளாம்
தேவியாம் பாரதியைத் தேடு. (௭)

தேடரியபாதம் தெரிந்துபணிவார்க்கு
வீடியலும்சம்பத்தும் மேவுதற்குத்—தாடருவாள்
நன்மனத்தில்பாரதியாள் நல்லிடமாய்வீற்றிருப்பாள்
இன்பாக வாழ்த்துவீர் இன்று. ௮)

இன்றேஉணரநீ எண்ணெண்கலையாளை
நன்ருகச்சிந்தைதனில் நாட்டிளுல்—என்றும்
அகிலமதைப்பெற்ற அயன்தேவிபாரதியாள்
அகததில அமருவாள் வந்து. (கூ)

வந்திடுபாவின் வகையுடன்சீரும்
தந்துமிகப்பாரதியாள் தாயாகிச்—சந்ததமும்
வேதங்களகூறும் விரைநறுநதாமரைநேர்
பாதம் பணிந்திடுவீர் பார் (ய)

பாரில்சிருருக்குப் பாஙகாகக்கல்விபொருள்
சேரவேதன்மனதில சிந்திப்பாள்—நேர
ஐம்புலனைத்தேற்ற அயன்தேவிபாரதியாள்
இன்புதரத் தநதிடுவாள் ஏற்று. (கக)

ஏற்றுநற்றெய்வத் திசைமடந்தைமாக்களுக்
கூற்றுவாள்நாவில உகப்புடனே—ஆதலிளுல்
நன்மக்கள்மூப்போது நாடிலஉளவாகும்
சொன்மொழியைச்சிந்திப்பீர் தேர்ந்து. (கஉ)

தேர்ந்தபொருளுமே தேளுகக்காட்டுவார்
நேர்ந்திட்டவேதம் நிகராகும்—சேர்ந்து
தாண்டவமாகப் பாரதியாள் தானிருப்பாள்
பாண்தருபாதம் பணி. (கந)

பணிந்திடும்தெய்வப் பரிவாரம்எல்லாம்
அணிந்திடுவார்பாதம் அடைந்து—பணிந்திடவே

மக்கள் முதல்யாவருநீர் மாநிலத்தில்கைக்கூப்பிப்
பக்கமாய்ப் பாரதியைப் பற்று. (கச)

பற்றிமனதுடனே பாரதியைச்சிந்தித்தால்
சொற்றபடிஆமெனவே சொல்லுவோம்—முற்றும்
அறியாதபிள்ளைகளே ஆர்கலியில்நித்தம்
மறவாமல் தோத்தரிப்பீர் மன். (கரு)

மன்னவுணர்ந்து பாரதியின்மாண்பதனை
இன்னதெனத்தேற்ற யினிமையுறத்—துன்னும்
தனிநாயகியாள் தரணிதனைப்பெற
பனிமலர்ப் பாவைப் பணி. (கசு)

பணிந்திடுவார்பூவை பழுதறவேநித்தம்
அணிந்திடுவார்நாவில் அமரத்—துணிந்தவடான்
மேவுகலைகள் விதிப்பாளேமேதினியில்
தேவியாம் பாரதியைத் தேர். (கஎ)

தேருகின்றபூவினெழில் தேனூறும்பாதங்கள்
தாருடையாள்பாரதியாள் தாயவளை—வாயார
வாழ்த்துவீர்நித்தநித்தம் வாடாமலர்கொண்டு
தாழ்த்துவீர் சென்னிதனைச் சாய்த்து. (கஅ)

சார்ந்தேதனக்கினிதாய்ச்சார்ந்துவருமெய்ப்பொருளை
ஓர்ந்துசரோருகத்தாள் உன்னதமாய்—சார்ந்து
பாமுதல்விபாரதியாள் பாலருக்குநற்கல்வி
நாவில் அமர்த்துவாள் நன்கு. (கசு

## வாழ்த்துக்கவிகள்.

பொருந்தும்இசைமடந்தை போற்றுகின்றநெஞ்சில்
இருந்தருளும்செஞ்சொல்லும் ஏற்கவே—பொருந்த(ருளும்
ஞானமும்இன்பமும் நல்லுலகவாழ்க்கையுமே
தானமொடுசேருமே தான் (க)


நன்னலமும்செல்வங்கள் நாளுநல்குந்தான்
தின்னலும்பாவங்கள் தேயுமே—துன்னுகின்ற
பாவமும்இன்றேதான் பாரதியாள்தீர்த்திடுவாள்
ஆவவே பொருளென் றறி. (உ)

நாடுபொருள்கைக்கூடும் ஞானமொடுகீர்த்தியுமே
நீடுவயதும் நீளுமே —வாடா
மலர்கொண்டுபாரதியை மண்ணுலகிலேற்றி
நிலைபெறுவாய் நெஞ்சே நினை. (ங)

பாராதி அந்தாதிபத்தியுடன்முப்பதுமே
சீராகக்கற்றோரைச்சேர்ந்திடுவாள்—பாரதியாள்
வீறானஞானமொடுமேவவேயீந்திடுவாள்
மாறாமலவைப்பிர்மகிழ்ந்து. (ச)

## கட்டளைக்கலித்துறை.

காரார்புதுப்பாளயசுப்பராயகனவானின்ற
காரார்கரமுடைச்சிங்காரவேலெனுங்கான்முளைதான்
காரார்கமலமலராசனத்தின்காரிகையாள்
காராருபாரதியந்தாதியச்சிற்கணித்தனனே.



உ

நவரச அலங்கார நாயகீகதை காட்சியும்,
செங்கல்பட்டு பாஜாரில் ம-௱-௱-ஸ்ரீ. சவுரிக்

இவ்வந்தாதியும் வேண்டியவர்கள் சென்னை பெரியமேட்டு லா
கடை திருவேங்கட செட்டியாரிடத்திலும். புதுப்பாளையம் ம-௱-ஸ்ரீ

லாகுட்டை தெருவில் 18 - வது நெ. வீட்டி
ஸ்ரீ. சில்லரைக்கடை முருகப்ப செட்டியாரிடத்தி

லிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ, நிமலி. சுப்பிராய செட்டியாரிடத்திலும்,
லும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.